

வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மறைந்த காங்கிரஸ் மூத்த தலைவர், தமிழ்ப் பற்றாளர் குமரி அனந்தன் அவர்களது உடலுக்கு அஞ்சலி செலுத்தி, தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்ட அவரது குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 60 மாற்றுத் திறனாளிகளுக்கு இனைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட இருசக்கர வாகனம் மற்றும் 93 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கான ஆணைகளை கழக நாடாளுமன்றக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி வழங்கி மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 180 அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, கனிம வளத்துறையின் சமுதாய பங்களிப்பு நிதியின் மூலம் தேவையான பரிசோதனை உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கினார். உடன், அமைச்சர் கீதா ஜீவன், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கூட்டுறவுச் சங்கங்களின் வரலாற்றில் முதன் முறையாக பயிர்க்கடன் ரூ.10 ஆயிரம் கோடியைத் தாண்டி சாதனை!

## கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதிலுரை... 12 ஆம் பக்கத் தொடர்ச்சி

5 ஆயிரம் கடைகள் ஏற்கெனவே அரசு கட்டடங்களில் இருக்கின்றன. எஞ்சியிருக்கிற கடைகளில் வாடகைக் கட்டடங்களில் இருப்பது 2,213 கடைகள். விரைவில் அதுவும் இந்தாண்டு நிறைவேற்றித் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே மாதிரி, பழைய கடைகளில் 20 வருடங்கள், 30 வருடங்களுக்கு மேலாக இருக்கிற நியாய விலைக் கடைகளை மராமத்து செய்ய வேண்டும், புதுப்பிக்க வேண்டுமென்றால், அதற்கும் ஆண்டொன்றுக்கு 2,500 கடைகள் சுழற்சி முறையில் அவைகளும் சரி செய்யப்பட்டு வருகின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மேலாண்மை தொடர்பாக ISO:9001 மற்றும் ISO:28000 தர சான்றிதழினை பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதைத்தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் நினைவூட்டினார்கள். அந்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 10,149 கடைகள் ISO:9001 சான்றிதழும், 2,059 கடைகள் ISO:28000 சான்றிதழும் பெற்றுள்ளன. மற்ற கடைகளும் விரைவில் இதுபோன்று மேம்படுத்தப்படும். கடந்த நான்கு ஆண்டுகளில் புதிதாக திறக்கப்பட்ட நியாய விலைக் கடைகளைப் பற்றிய விவரம். கூட்டுறவுத் துறையின்மூலம், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த 4 ஆண்டுகளில் 1,850 புதிய நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றில் 572 முழுநேர கடைகள், 1,278 பகுதிநேர கடைகளாகும்.

இவற்றோடு இணைந்து கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள், தமிழ்நாட்டில் 45 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றின்மூலம் தரமான நுகர்வோர் பொருட்கள் குறைந்த விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. 20242025 ஆம் நிதி ஆண்டில் இது வரை பண்டக சாலைகள் மூலமாக ரூ.2196/கோடிக்கு விற்பனை நடைபெற்றுள்ளது என்பதை நான் பெருமையோடு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்பொழுது தனியார் அமைப்புகள்மூலம் பல்வேறு வகையான multinational companyகள் இதில் ஈடுபட்டிருந்தாலும்கூட

யிடங்களை நிரப்ப வேண்டும் என்றும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையிலும் கூட்டுறவுத் துறையில் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், மாநில ஆள் சேர்ப்பு நிலையம் மூலமாக கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிய உதவியாளர், நியாயவிலைக் கடைகளுக்கான விற்பனையாளர், கட்டுநர் போன்ற பணியிடங்களுக்கும் மற்றும் தமிழ்நாடு பணியாளர் தேர்வு வாரியம் மூலமாகவும் கடந்த நான்கு ஆண்டுகளில் 13,266 பணியாளர்களை தேர்வு செய்வதற்கு தேர்வுகள் நடத்தப்பட்டு, அதில் 9,913 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள 3,353 பணியிடங்களும் விரைவில் நிரப்பப்படும் என்பதை இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு சங்கத் தேர்தல், கடந்த காலங்களில் முறையாக உறுப்பினர்களின் சேர்க்கையும், தேர்தலும் நடத்தப்படவில்லை. இவற்றையெல்லாம் பதிலுரையில் கேட்பதற்குள் அவர்கள் சென்றுவிட்டார்கள். கடந்த காலங்களில் பல்வேறு வகையான கூட்டுறவு அமைப்புகளில் உறுப்பினராக சேர்க்கப்பட்டு இருந்தவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 46 இலட்சத்து 14 ஆயிரத்து 949 உறுப்பினர்கள் இருந்தனர். அதில் உள்ளே சென்று பார்த்தால் ஒன்றும் இல்லை. பாதிபேர்தான் இருக்கிறார்கள்.

தகுதியின்மையின் அடிப்படையில் நீக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 35,06,495 (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் உரிய பங்குத் தொகை செலுத்தாத உறுப்பினர்கள், உரிய செயல் எல்லையில் இல்லாத உறுப்பினர்கள், எல்லையில் கூட இல்லாமல் எல்லாம் duplicate ஆக பதிந்து வைத்திருந்த காரணத்தால், இவ்வளவு எண்ணிக்கை இருந்தது. நீக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை 29,01,224. ஆக இறுதியாக, 1 கோடியே 59 இலட்சம் தான் இறுதியாக தேறியிருக்கிறது. இனி, இதை வைத்து. இதில் என்னவென்றால், புதியதாக, மாண்பமை நீதிமன்றத்தின் உத்தரவுபடி, உறுப்பினர்களின் ஆதார் மற்றும் குடும்ப அட்டைகளை இணைக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தவகையில் 97.83.634 நபர்கள் தான் இதுவரை

எடுக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். துறைகளில் நடந்தேறும் தரம் வாய்ந்த திட்டங்களும், தடம் பதித்த சாதனைகளும் அடுத்த தலைமுறையினருக்கு கொள்கையின் உணர்வைப் போதிக்கட்டும் எனக்கூறி, கூட்டுறவுத் துறை தொடர்பான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஓரிரு அறிவிப்புகளை மட்டும் தற்போது படிக்கிறேன். 49 அறிவிப்புகள் இருக்கிறது. அவ்வளவும் படிக்க வேண்டியதில்லை.

இந்த கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில், நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்களும் நிறைய பேசிவிட்டார்கள். ஏற்கெனவே நம்முடைய வேளாண் துறை அமைச்சர் அவர்கள், இந்தத் துறையினுடைய சார்பாக நிறைய அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமல்ல, நகர்ப்புறங்களில் வாழக்கூடிய மக்களுடைய பொருளாதாரத்திற்கும் விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்தவர்கள், எல்லோருக்குமான ஒரு பொருளாதார வளர்ச்சி வர வேண்டுமென்றால், கூட்டுறவுச் சங்கங்கள் வளர வேண்டும். அந்த வகையில் நம்முடைய தமிழ்நாட்டில் ஒரு நீண்ட, நெடிய வரலாறு கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. ஏறத்தாழ, 120 ஆண்டுகளைக் கடந்த நிறைய கூட்டுறவு சங்கங்கள் நம்முடைய மாநிலத்தில் இயங்கி வருகின்றன. ஆகவே, அவர்கள் இன்றைக்கு நம்முடைய இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, நீங்கள் பார்த்தீர்களென்றால், முதலமைச்சர் அவர்கள் 'எல்லாருக்கும் எல்லாம்' என்ற திராவிட மாடல் அரசின் அந்த கொள்கைகளை கொண்டுபோய் சேர்க்கின்ற வகையில் சீரான வளர்ச்சி தமிழகத்திலே இருக்க வேண்டுமென்பதற்காக திட்டமிட்ட காரணத்தினாலேதான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்ற முதன்மையான திட்டத்தில் கடந்த பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 6 ஆயிரம் கோடி ருந்த அந்த விவசாயக் கடனை ஆண்டுக்கு சராசரியாக இன்றைக்கு 13 ஆயிரம் கோடிக்கும் மேற்பட்ட ரூபாயினை வழங்கியிருக்கின்ற சாதனையைப் படைத்திருக்கிறார்கள். இந்தத் துறையின் மூலமாக இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. விவசாயிகளைப் பாதுகாப்பது இந்த அரசு பொறுப்பேற்றதைப் பாதுகாப்பதற்கு சமம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆக, பல்வேறு வகையான மூன்றடுக்கு வங்கிகள், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய கடன் வழங்கல் சங்கங்கள், கூட்டுறவு சங்கங்கள், அதைப்போல, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், நம்முடைய மாநில கூட்டுறவு வங்கி என இவர்களுடைய வங்கிப் பரிவர்த்தனை ஆண்டுக்கொன்று பார்த்தீர்களென்றால், இதுவரை இல்லாத அளவுக்கு 1 இலட்சத்து 6 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இந்த நிதியாண்டு வரைக்கும் வரவுசெலவு நடைபெற்றிருக்கிறது. அந்தளவுக்கு இந்த வங்கி சேவை இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் நடப்பு 2025 ஆம் ஆண்டில், 1 கோடியே 10 இலட்ச ரூபாய்க்கு குறையாமல் அதனுடைய வர்த்தகம் இருக்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் இருந்த இலக்குகளை எட்டியதைப்போல, இந்தாண்டும் நிச்சயமாக அதை எட்டுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பயிர்க்கடன் கோரி விண்ணப்பித்து 2, 3 நாட்கள், 1 வாரம் என்ற காலதாமதமில்லாமல், உடனுக்குடன் கடன் கிடைப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. நிலமற்ற ஏழை விவசாயப் பெண்கள், அவர்கள் விவசாயத் தொழிலுக்கு நிலம் வாங்க வேண்டுமென்றால் அவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்குகிற திட்டம் நடைமுறையில் இருக்கிறது. இவ்வாறு, பொருளாதாரத்தை உயர்த்துகின்ற ஒரு மகத்தான துறையாக இந்தத் துறை இருந்து வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையின் சார்பாக 49 அறிவிப்புகள் இன்றைக்கு வெளியிடப்படுகின்றன. காலத்தின் அருமை கருதி, நான் அவற்றை இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) திருப்பூர் மத்திய வங்கி குறித்த கோரிக்கையை வருகிற ஆண்டில் பார்த்துக்கொள்ளலாம்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதிலுரையில் பேசினார்.

# தமிழ்நாடு கூட்டுறவுத் துறையில் வங்கி வளர்ச்சி - செயல்பாடுகளைப் பாராட்டி ஐந்து தேசிய விருதுகள்!

நம்முடைய கூட்டுறவு சங்கங்கள் நடத்துகின்ற பல்பொருள் அங்காடிகள் இவற்றுக்கெல்லாம் மக்களிடத்தில் மிகப் பெரிய வரவேற்பு, நம்பிக்கை இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டுதான் இத்தகைய அளவிற்கான வணிகம் நடைபெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அறிவிப்பை நான் படிக்கவில்லை. படித்ததாக பதிவு செய்துவிடுவேன்.

### 9,913 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன!

கூட்டுறவுத் துறையின்மூலம் தமிழகம் முழுவதும் 57 petrol bunks இருக்கின்றன. (குறுக்கீடு) உங்கள் ஊரிலும் ஒரு petrol bunk திறந்துவைத்துவிட்டு வந்தோம். தமிழக முதலமைச்சர் அவர்கள் சுதந்திர தின உரையின்போது ஒன்றை குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார். அதில் முதல்வர் மருந்தகம் என்ற மகத்தான திட்டத்தை அறிவித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தில் தரமான generic மருந்துகள், branded மருந்துகள், surgicals, nutraceuticals மற்றும் இந்திய மருந்துகளை குறைவான விலையில் பொது மக்களை சென்றடையும் வகையில் 1,000 முதல்வர் மருந்தகங்கள் கூட்டுறவுத் துறையின்மூலம் தொடங்க அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதனைத் தொடர்ந்து, இத்திட்டத்தைச் செயல்படுத்த முதல்வர் மருந்தகம் என்ற இணையதளம் தொடங்கப்பட்டு அதன் மூலமாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின்மூலம் தொழில்முனைவோர் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் "முதல்வர் மருந்தகங்களை" துவங்கிட தமிழக முதல்வர் அவர்கள் ஊக்குவித்தார்கள். இத்திட்டத்தில் தொழில்முனைவோருக்கு ரூ.3 இலட்சமும், கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.2 இலட்சமும் மானியமாக அளிக்கப்படுகிறது. முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் 2422025 அன்று 1,000 முதல்வர் மருந்தகம் தொடங்கி வைக்கப்பட்டு, தற்போது இவை அனைத்தும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. பணியாளர்கள் தேர்வு, தமிழக முதலமைச்சர் அவர்கள் காலிப் பணி

அதனை பதிவு செய்திருக்கிறார்கள். எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் ஜனநாயக முறைப்படி (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். தேர்தலைப் பொறுத்தவரையில், ஜனநாயத்தை நிலை நாட்டுவதற்கும், தேர்தலை சந்திப்பதற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் சளைத்ததல்ல என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### செயலால் பாடம் எடுக்கும் முதல்வர்!

தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை முழு உத்வேகத்துடன் எழுச்சியுடன் பணியாற்றி, ஏழையெளிய மற்றும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மிகப்பெரும் பங்களிப்பை ஆற்றி வருகிறது. இந்த பங்களிப்பு என்றென்றும் தொடரும். என்றும் மக்களுக்கான ஆட்சியாக மக்களுடன் ஒன்றிணைந்து மாபெரும் சாதனைகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றும் செய்து காட்டப் போகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அது காலத்தின் கட்டாயம். அந்த கட்டாயத்தில் ஒன்றுதான் இன்று காலையில் வந்த நல்ல செய்தியெல்லாம். (மேசையைத்தட்டும் ஒலி) உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. பொருளாதார வளர்ச்சி (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, தெற்கு தேய்கிறது என்பதெல்லாம் மாறி, (குறுக்கீடு) இன்று தமிழ்நாட்டை எடுத்துக்காட்டாக பல்வேறு நாடுகளின் சாதனைப் பட்டியல்கள் வெளிவருவதை நம்மால் காண முடிகிறது. காரணம், சமரசம் இல்லாத கொள்கைப் பிடிப்பும், சுயநலம் இல்லாத சமூக சேவையும்தான் நம்மை ஆரோக்கியமாக மக்களிடம் பணியாற்ற வைக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தப்பித்தவறி கூட தமிழ்நாட்டிற்கு நன்மை செய்து விடக்கூடாது என்று எண்ணுபவர்களை எதிரே நிற்க வைத்து, யாரும் எதிர்பார்க்காத ஏற்றமிகு திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தி, சொல்லால் அல்ல, செயலால் அடித்து பாடம்

## மாநிலத்தின் உரிமைகள் - மக்களின் நலன்கள்மீது தொடுக்கப்படும் தாக்குதலை எதிர்ப்பதில் -

# இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்கிறார் முதல்வர்!

## தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் பேட்டி!



தஞ்சாவூர் ஏப்.12-

தஞ்சை மத்திய மாவட்டக் கழகம், கலைஞர் அறிவாலயத்தில் திருவையாறு சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், மத்திய மாவட்ட தி.மு.க செயலாளருமான துரை.சந்திரசேகரன் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது :

மக்கள் தொகை அடிப்படையிலான நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை என்பது நமது தலையின் மீது தொங்கும் கத்தியைப் போன்றது. தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தைக் குறைத்து நமது அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் எந்தவொரு நடவடிக்கையும் மாநிலத்தின் உரிமைகளின் மீதும் மக்களின் நலன்களின் மீதும் நேரடியாய் தொடுக்கப்படும் தாக்குதலாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டியாய் திகழ்கிறார். அவர் நமது தமிழ்நாட்டின் நலனுக்காக மட்டுமின்றி தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படும் அனைத்து மாநிலங்களுக்காகவும் முன்னணியில் நின்று போராடி வருகிறார். முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மார்ச் 5 ஆம் தேதி ஒன்றிய பாஜக அரசின் தொகுதி மறுவரையறை சதிக்கு எதிராக சென்னை தலைமைக் கழகத்தில் கூட்டப்பட்ட அனைத்து கட்சி கூட்டத்தில் அழைக்கப்பட்ட 63 கட்சிகளில் 58 அரசியல் கட்சிகள் கலந்து கொண்டு முதலமைச்சரின் முடிவை ஆதரித்து ஒரே குரலில் ஒன்றிய பாஜக அரசின் செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்தது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

நியாயமான தொகுதி மறுவரையறை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. மேலும் இந்த தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படும் மற்ற மாநிலங்களை அணுகி, நியாயமான தொகுதி மறுவரையறை மேற்கொள்வதை உறுதி செய்ய ஒரு கூட்டு நடவடிக்கைக் குழுவை (JAC) உருவாக்குவதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில், கடந்த 22 ஆம் தேதி முதலமைச்சர் தலைமையில் சென்னையில் கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் நடைபெற்றது. அதில் மூன்று மாநில முதலமைச்சர்கள், துணை முதலமைச்சர், தலைவர்கள் என தொகுதிவரையறையால் பாதிக்கப்படும் தமிழ்நாடு, தெலங்கானா, கர்நாடகா, ஒடிசா, கேரளா, பஞ்சாப் உள்ளிட்ட 6 மாநில பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மக்கள் தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் விதமாக 1971ஆம் மக்கள் தொகையின் அடிப்படையிலான நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையே தொடரும் என அறிவிக்கப்பட்டது. இன்றுவரை அந்த எண்ணிக்கையே தொடர்கிறது.

1971ஆம் ஆண்டு கணக்கின்படி தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் ஒவ்வொரு பத்தாண்டுக்கான மக்கள் தொகை வளர்ச்சி என்பது 23.41% ஆகவும், வட மாநிலங்களில் 24.39% ஆகவும் இருந்து, அதாவது இரு பகுதிகளிலும் மக்கள்தொகை வளர்ச்சியானது சமநிலையில் இருந்தன. அதன்பிறகு மக்கட்தொகை கட்டுப்பாட்டுத் திட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டன. தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்கள் மிகச் சிறப்பாகக் கட்டுப்படுத்தின. அதன் விளைவாக தற்போது வட மாநிலங்கள் உத்தரப்பிரதேசம், பிஹார், மத்தியப்பிரதேசம், உள்ளிட்ட மாநிலங்களுக்கும் பாதிக்கப்படவுள்ள தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கும் இடையில் மக்கள் தொகை வளர்ச்சியில் பெரும் வேறுபாடு உள்ளது.

தற்போது கணக்கின்படி பார்த்தால், தமிழ்நாடு, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்கள் மக்கட்தொகையின் பத்தாண்டு வளர்ச்சி விகிதத்தை 12.51% ஆகக் குறைத்தன, அதேசமயம் வட மாநிலங்கள் 21.83% என்ற உயர் வளர்ச்சி விகிதத்திலேயே உள்ளன. வெறும் மக்கட்தொகை வித்தியாசம் மட்டுமில்லை பொருளாதாரத்தையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். மக்கள்தொகையைச் சிறப்பாக குறைத்துள்ள தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா, ஒடிசா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் இந்திய பொருளாதாரத்தில் கணிசமாக பங்களிக்கின்றன. அவற்றின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) பங்கு 36% ஆகும், ஆனால் மத்திய அரசிடமிருந்து திரும்பக் கிடைக்கும் வரிப் பகிர்வு வெறும் 27% மட்டுமே. அதுவே பீஹார், உத்தரபிரதேசம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் GSDPயில் 20% மட்டுமே பங்களிக்கின்றன, ஆனால் அவை 42.5% என்ற பெரும்பங்கை வரி பகிர்வாக பெற்று வருகின்றன. இது நியாயமற்ற பகிர்வு முறை, அதாவது இந்திய பொருளாதார வாளர்ச்சிக்கு பெரும் பங்காற்றும் மாநிலங்களுக்கு குறைந்த அளவும், குறைந்த பொருளாதார உற்பத்தி கொண்ட மாநிலங்களுக்கு அதிக பங்கும் கிடைத்து வருகிறது.

### ஆபத்தான முன்னுதாரணம்!

ஒவ்வொரு 100 ரூபாய்க்கும் தமிழ்நாடு ரூ 29, கர்நாடகா ரூ 14 என மிக குறைந்தளவே பெறுகின்றன, மாறாக, நான்கு வட மாநிலங்கள் தாங்கள் செலுத்தும் ஒவ்வொரு ரூ 100க்கும் சாரசரியாக ரூ 425 பெறுகின்றன. பீகார் மட்டுமே ரூ 922 ரூபாய் பெறுகிறது. மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு தொகுதி மறுவரையறை மேற்கொள்ளப்பட்டால் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட ஏழு மாநிலங்களுக்கு அது அநீதியாக அமையும். எம்.பிக்களின் எண்ணிக்கை குறையும், அதனால் அரசியல் பிரதிநித்துவமும் குறையும். மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை வெற்றிகரமாக செயல்படுத்திய மாநிலங்களை இந்த தொகுதி மறுவரையறை தண்டிக்கிறது. இது கூட்டாட்சி தத்துவதற்கே எதிரானது. தேசிய கொள்கைகளை பின்பற்றிய மாநிலங்கள் நியாயமாக பாராட்டப்பட வேண்டும், மாறாக தண்டிக்கப்படக்கூடாது. இத்தகைய முயற்சி ஆபத்தான முன்னுதாரணனமாக அமையும். நாடாளுமன்ற தொகுதிகளின் இழப்பு என்பது வெறும் எண்ணிக்கை குறைவு மட்டுமல்ல — இது நமது அரசியல் பலம், உரிமைகள் மற்றும் நம் எதிர்காலத்தையே வீழ்ச்சிப் பாதையில் கொண்டு சென்றுவிடும். குறைவான அரசியல் பிரதிநிதிகள் இருந்தால் நமது மாநிலங்கள் நியாயமான நிதியைப் பெறுவதிலும், கொள்கைகளை பாதுகாப்பதிலும், மக்களின் தேவைகளை ஒன்றிய அரசிடம் கேட்டு பெறுவதிலும் கடுமையான சவால்களை எதிர்கொள்ள வேண்டியது வரும்.

### சப்பைக்கட்டு பேச்சுகள்!

பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசும் அதன் அமைச்சர்களும் தொகுதி மறுவரையறைப் பிரச்சினையில் அமைதியாக உள்ளனர், தமிழ்நாட்டிற்கு எந்த உறுதிமொழிகளையும் இதுவரை வழங்கவில்லை. மாறாக, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரின் தெளிவற்ற, சப்பைக்கட்டு பேச்சுகளை நம்பச் சொல்கின்றனர். கடந்த வாரத்தில், இப்பிரச்சனை தொடர்பாக நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பவும், அதை பற்றி பேசவுமே நமது நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுமதிக்கவில்லை. இது ஒன்றிய பாஜக அரசு நமது நியாயமான அச்சத்தை போக்க கூட விரும்பவில்லை காரணம் அதை தான் அவர்கள் செய்ய நினைக்கிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமாக தெரிகிறது. "தமிழ்நாட்டு மக்களை நாகரிகமற்றவர்கள் என்று ஒன்றிய அமைச்சர் கூறிய கருத்து, பா.ஜ.க.வின் நம்மைப் பற்றிய இழிவான பார்வையை வெளிப்படுத்துகிறது. இப்போதே இந்நிலைமை என்றால் நமது நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டால் எவ்வளவு அலட்சியப்படுத்துவார்கள் என்பதை நினைத்து பாருங்கள்."

"மணிப்பூரை கொஞ்சம் பாருங்கள்—குறைந்த அரசியல் பிரதிநிதித்துவம் இருந்த காரணத்தால் ஒன்றிய பாஜக அரசால் கைவிடப்பட்டு புறக்கணிக்கப்பட்டது. நமது குரலும் நாடாளுமன்றத்தில் பலவீனமடைந்தால் தமிழ்நாட்டிற்கும் அதே நிலை தான் ஏற்படும்." இந்த சூழலில், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டம், தமிழ்நாடு உட்பட தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படவிருக்கும் மாநிலங்களை ஒருங்கிணைத்து உறுதியாக எதிர்ப்பை வெளிப்படுத்தியதால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறி உள்ளது. மற்ற ஏழு மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்கள், துணை முதலமைச்சர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் போன்ற மூத்த தலைவர்களை ஒன்றிணைத்து, நியாயமான தொகுதி மறுவரையறை கோரிக்கையை வலுப்படுத்தும் விதமாக பாதிக்கப்படும் அனைத்து மாநிலங்களும் ஒருங்கிணைந்து ஒரே குரலாய் ஒலிப்பதை உறுதி செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். இவ்வளவு பேர் கூடியிருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

நமது ஊடக நண்பர்களுக்கும் இந்த பிரச்சினையை உற்று நோக்கும் அனைவரும் — இப்போது சேர்ந்து குரல் கொடுக்க வேண்டிய நேரமிது. வரப்போகும் தொகுதி மறுவரையறை ஒரு பெரும் சவாலை முன்வைக்கிறது, பொது விவாதம் வலுவாக இருந்தால்தான் இந்த பேராபத்தில் இருந்து தக்காத்து கொள்ளும் போராட்டமும் வலுவடையும். தமிழ்நாட்டோடு பிற பாதிக்கப்படும் மாநிலங்களும் ஒன்றிணைந்துள்ளன, இப்போது அனைத்து ஜனநாயக சக்திகளும் நியாயமான பிரதிநிதித்துவத்திற்கான இந்த போராட்டத்தில் எங்களுடன் நிற்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். ஒன்றிய அரசு நியாயமான மற்றும் நமது உரிமைகளை பாதிக்காத தொகுதி மறுவரையறையை மேற்கொள்ள வேண்டும் இல்லை என்றால் தொகுதி மறுவரையறையே அடுத்த 25 ஆண்டுகளுக்கு தள்ளி வைக்க வேண்டும் அதுவரை இந்த போராட்டத்தில் நமது முதலமைச்சர் அவர்களோடு தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து நிற்க வேண்டும் அப்போது தான் நமது உரிமைகளை பாதுகாக்க முடியும்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ. பேட்டியில் தெரிவித்தார்.

## அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் பி.என்.அம்மாவாசி தந்தை நல்லுத்தேவர் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.12-

அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் கட்சியின் நிறுவனத் தலைவர் பி.என்.அம்மாவாசி அவர்களின் தந்தை நல்லுத்தேவர் அவர்கள் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் கட்சியின் நிறுவனத் தலைவர் பி.என்.அம்மாவாசி அவர்களின் தந்தையார் நல்லுத்தேவர் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்தினேன்.

தன்னை வளர்த்து ஆளாக்கிய தந்தையை இழந்து தவிக்கும் அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் கட்சியின் நிறுவனத் தலைவர் பி.என்.அம்மாவாசி மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் - அவரது கட்சி நிர்வாகிகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்பேரில், தமிழ்நாடு அரசு, உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில், ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றம் அளித்த மகத்தான தீர்ப்பை வரவேற்று கரூர் மாவட்ட கழகம் சார்பில் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிவுறுத்தலின் பேரில் கரூர் பேருந்து நிலையம் ரவுண்டானா அருகே பட்டாசு வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும் கழகத்தினர் கொண்டாடினர்.